18th March 1963]

திரு. கே. ஏ. மதியழகன் : ஸார், இம்மாதிரி கூட்டுறவு சங்கங்களில் திண்டுக்கல் கூட்டுறவு சங்கத்திலும் ஊழல் ஏற்பட்டிருக்கிறது. அதற்குப் பொறுப்பாளியானவர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் என்ற காரணத்தினுல் வழக்குத் தொடரப்பட்டு, அது வாபஸ் வாங்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன். அப்படி வாபஸ் வாங்கப்பட்டது உண்மையா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : இதில் கட்சிப் பாகுபாடு கிடையாது. எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் கூட்டுறவு சங்கத்தில் ஊழல் செய்தால், அவர்கள்மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும். எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவர்மீது முதலில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும் என்பதை வற்புறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. முனு ஆதி : கனம் தலைவர் அவர்களே, ஐயனுவரம் கூட்டுறவு பால் பண்ணையில் ஊழல் நடந்திருக்கிறதே, அதை அரசாங்கம் கவனித்து அதன்மீது நடவடிக்கை எடுக்க முன் வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : நானே அந்தப் பால் பண்ணையை ஒரு தடவை சென்று பார்த்தேன். அது நல்ல முறையில் நடந்துகொண்டிருக்கிறது. ஊழல்கள் நடந்தால் வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. எம். தண்டாயுதபாணி : கனம் தலைவர் அவர்களே, சாதாரணமாக கிராமங்களிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களைத் தணிக்கை செய்யும்போது சீனியர் இன்ஸ்பெக்டர்களைக் கொண்டு தணிக்கை செய்ய முடியவில்லை. அதனுல் பஞ்சாயத்து யூனியனிலுள்ள சி.எஸ்.ஆர்.-ஐக் கொண்டு தணிக்கை செய்வதற்கு ஏதாவது வழி வகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : அதற்கு வேண்டிய விவரம் இப்பொழுது என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் அதற்கு பதில் சொல்லுகிறேன்.

கைத்தறி கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கம் (சைதாப்பேட்டை)

*** 274 கேள்வி.—திரு. க. ர. நல்லசிவம் :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம் சைதை கைத்தறி கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கத்தின் நிர்வாகிகள்மீது பணக் கையாடல் குற்றம் ஏதேனும் உண்டா ?

(இ) அதன்மீது ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : (அ) ஆம்.

[18th March 1963

(இ) குற்றவாளிகள்மீது கோர்ட்டில் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டது. கையாடப்பட்ட தொகையை சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து வசூலிப்பதற்கு சென்னை உதவி கூட்டுறவு ரிஜிஸ்தரார் முன்பு சங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. இதற்கு பொறுப்பான இலாகா அதிகாரிகள்மீதும் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேம்பாலம் அமைத்தல் (கோடம்பாக்கம்)

* 275 கேள்வி.—திரு. முனு ஆதி : கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோடம்பாக்கம் இரயில்வே நிலையத்தின் அருகில் இரயில் பாதையைக் கடக்க மேம்பாலம் ஒன்று அமைப்பதுபற்றிய அரசாங்க உத்தேசம் எந்த நிலையிலுள்ளது ?

(இ) எப்பொழுது வேலை துவங்கப்படும் ?

THE HON. SRI V. RAMAIAH : (அ) & (இ) Orders have been issued for the construction of an over bridge, in lieu of the existing level-crossing at Arcot Road near Kodambakkam railway station in Madras City. The work will be taken up shortly.

திரு. கே. ஏ. மதியழகன் : ஸார், கோடம்பாக்கம் மேம்பாலத்தைக் கட்டுவதாக நீண்ட நாட்களாகவே சொல்லப்பட்டு வருகிறது. ஆனால் அந்தப் பாலத்தின்மீது சினிமா நடிகர்களும், நடிகைகளும் அடிக்கடி போய் வருவதால் அங்கே பெரிய ஜன நெருக்கடி ஏற்படுகிறது. அது போக்குவரத்திற்கு இடையூறாக இருக்கிறது. அதனால் அங்கு மேம்பாலம் கட்டுவதைச் சீக்கிரத்தில் எடுத்துக்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் சபாநாயகர் : மற்ற ஜனங்கள்தான் போகவேண்டும், நடிகர்கள், நடிகைகள் போகக்கூடாது என்று கனம் அங்கத்தினர் சொல்லுகிறார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் அங்கத்தினர் அந்த இடத்தில் ஜன நெருக்கடி உண்டாவதன் காரணத்தை எடுத்துச் சொன்னார். நடிகர்கள், நடிகைகளுக்காக பாலம் கட்ட வேண்டுமென்ற அவசியம் கிடையாது. அதையே அவர்கள் ஒரு விளம்பரமாக வைத்துக்கொள்ளலாம். அந்த இடத்தில் இருப்பதுபோன்று பல இடங்களிலும் மேம்பாலம் கட்டவேண்டிய அவசியம் இருக்கிறது என்பதை மனதில் கொண்டு அதற்கு வேண்டிய எஸ்டிமேட்டும் தயாராக இருக்கிறது. இப்பொழுது அது சாங்ஷன் ஆகி வேலை தொடங்கக்கூடிய கட்டத்தில் இருக்கிறது.

திரு. முனு ஆதி : டெண்டருக்கு விடப்பட்டால் எந்த கால அளவுக்குள் அது முடிக்க வேண்டும் என்று அரசாங்கம் சொல்லி இருக்கிறதா ? அதற்குள் அது கட்டி முடிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன் ?